செய்தி வெளியீடு எண் : 24 நாள் : 16.05.2018

## *தேனி மாவட்டம்,*
## *வட்டார அளவில் விவசாயிகளுடனான ஆலோசனைக் கூட்டம்*
## *மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்*
## *தலைமையில் நடைபெற்றது:-*

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகத்தில், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வனத்துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, பொதுப்பணித்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் பல்வேறு அரசுத்துறைகள் பங்கு பெற்ற வட்டார அளவில், விவசாயிகளுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று (16.05.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், விவசாய உற்பத்தி செலவினங்களை குறைப்பது குறித்தும், பண்ணைக்குட்டைகள் அமைத்தல், கூட்டுப்பண்ணையத்திட்டம், நுண்ணீர் பாசனத்திட்டம், குடிமராமத்துப்பணிகள், இயற்கை உரங்கள் தயாரித்தல், அரசின் சார்பில் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்துரையாடினார்.

விவசாயிகள் விவசாய நிலங்களுக்கு தேவையான பாதை வசதி, தடுப்பணைகள் ஏற்படுத்துதல், உலர் கலங்கள் அமைத்தல், பரமசிவன் கோயில் கண்மாய், பூச்சரி கண்மாய், வடமாச்சியம்மன் கோயில் கண்மாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், வேளாண் சார்ந்த பல்வேறு திட்டங்களுக்கு மானியம் வேண்டுதல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் முன் வைத்தனர். அதன்பேரில், விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்.

கூட்டத்திற்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழக அரசின் உத்தரவின்படி, வேளாண் பெருங்குடி மக்களின் தேவையினை பூர்த்தி செய்து, அவர்களின் வருவாய் மற்றும் உற்பத்தியினை பெருக்கிட மாதந்தோறும் மாவட்ட அளவில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் ந டத்தப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து விவசாயிகளும் பங்கேற்க வேண்டும் என்பதற்காக வட்டார அளவில் விவசாயிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றும் போது விவசாயிகளின் கோரிக்கைகளை எளிதில் நிறைவேற்றிட முடியும். வேளாண் பெருங்குடி மக்கள் தங்களது பகுதிகளில் உள்ள குறைகள் மற்றும் கோரிக்கைகளை தெரிவித்து, அதற்கு சரியான அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளை தெரிவித்தால் அதனை உடனடியாக செயல்படுத்திட மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது.

வேளாண் பெருங்குடி மக்களின் உற்பத்தி செலவினங்களை குறைத்து அதிக அளவில் வருவாய்யினை ஈட்டிட தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை முறையாக பின்பற்றிட வேண்டும். வேளாண்மைத்துறையின் மூலம் உழவன் செயலி (Uzhavan APP) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் விவசாயிகள் அரசின் மானியத்திட்டங்கள், இடுபொருட்கள் முன்பதிவு, பயிர் காப்பீட்டு விபரம், வட்டார அளவில் விதைகள் மற்றும் உரங்களின் இருப்பு விபரம், வேளாண் இயந்திரம் வாடகை மையங்களின் விபரம், விவசாயிகள் தாங்கள் விளைவித்த விளைபொருட்களின் சந்தை விலை நிலவரம் பற்றி எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

கூட்டுப்பண்ணையத்திட்டத்தின் கீழ் உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு, டிராக்டர் மற்றும் இதர வேளாண் கருவிகள் குழுவினால் வாங்கப்பட்டுள்ளது. இக்கருவிகளை குழு உறுப்பினருக்கு குறைந்த வாடகைக்கு விடுவதோடு இதர விவசாயிகளுக்கும் வெளி வாடகைக்கு விட்டு குழுவிற்கு வருமானம் ஈட்டப்படுவதுடன், குழு உறுப்பினர்களின் விளைபொருட்களை ஒருங்கிணைத்து இடைத்தரகர்கள் இன்றி விற்பனை செய்து அதிக இலாபம் ஈட்டிட முடியும். தண்ணீரின் அருமை கருதி அதனை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற தேவையான நவீன முறைகளை கடைபிடித்திட வேண்டும். தமிழக அரசால் வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனை அறிந்து நாம் மட்டுமல்லாமல் நம்மைச் சுற்றி உள்ள விவசாயிகளும் அரசின் திட்டங்களை பெற்று பயனடைய செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் திரு.கௌதமன், இ.வ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.முகம்மது அப்துல் நசீர் அவர்கள், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.விஜயகுமாரன் அவர்கள், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் திரு.சென்னியப்பன் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் (பொ) செல்வி கவிதா அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சந்திரசேகரன் அவர்கள், போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையாளர் திரு.சுவாமிநாதன் அவர்கள், வட்டாட்சியர் செல்வி ஆர்த்தி அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**